Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 41
சனிக்கிழமை
06 ஜனவரி 2024
மார்கழி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"எல்லாத்தையும் வித்துச்சுட்டுப்போட்டு இப்ப இஞ்சத்தை கரண்டையும் விக்கிறதுக்கு பிளான் போடுகினம் கண்டியளோ."

## திட்டமிட்டபடியே தமிழரசு மாநாடு

வவுனியா, ஜன. 6
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு ஏற்கனவே திட்டமிட்ட தினங்களில் இடம்பெறும் என கட்சியின் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். ☞ 11

ஒரே கல்வி வலயமாக

## மடு, துணுக்காய் இணைக்கப்படும்

வடக்கு ஆளுநர் நேற்றுத் தெரிவிப்பு

வவுனியா, ஜன. 6
மடு மற்றும் துணுக்காய் கல்வி வலயங்கள் வரும் காலத்தில் ஒரே கல்வி வலயங்களாக இணைக்கப்படவுள்ளன - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ். ☞ 11

இலங்கையின்

## கல்விக் கேந்திரமாக வடமாகாணம் மாறும்

வவுனியா, ஜன. 6
இலங்கையின் கல்விக் கேந்திரமாக வடமாகாணம் மாற்றப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:- ☞ 11

ரணிலின் பாதுகாப்புத் தொடரணியின்

## உலங்குவானூர்தி பழுது: திடீரெனத் தரையிறக்கம்!

யாழ்ப்பாணம், ஜன. 6
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புத் தொடரணியில் 3 உலங்கு வானூர்திகள் பயணித்த நிலையில் அவற்றில் ஒன்றில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, 3 உலங்குவானூர்திகளும் திடீரென தரையிறக்கப்பட்டுள்ளன.
கொழும் ☞ 11



4 ஆயிரம் மில்லியன் டொலர் முதலீட்டில்

# 3 - 4 ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்கு மின்சாரம்

இந்த ஆண்டு முதலீடு என்கிறார் ஜனாதிபதி ரணில்

கிளிநொச்சி, ஜன. 6
வடக்கிலிருந்து இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்கு மின்சாரத்தை விற்பனை செய்யவேண்டும். அதற்குரிய வகையில் தயாராகவேண்டும். இந்தப் பகுதிக்கு முன்னார் ☞ 11

5 ஆண்டுகளுக்குள்

# வடமாகாணத்தில் முழு அபிவிருத்தி!

வவுனியாவில் வைத்து ஜனாதிபதி உறுதிமொழி

**வவுனியா, ஜனவரி 6**

**வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் முழுமையான அபிவிருத்தி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தேசியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தக்கூடிய ஓர் இயந்திரமே வடக்கு என்றும் அவர் தெரிவித்தார்.** ☞ 11

## வடக்கு விவசாயிகள் திறமை மிக்கவர்கள்!

ஜனாதிபதி பாராட்டு

வவுனியா, ஜன. 6
வடக்கு மாகாண விவசாயிகள் மிகத் திறமையானவர்கள் என்று பாராட்டியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார். ☞ 11

## ரணிலின் வருகையால் மக்களுக்கு இடையூறு

வவுனியா, ஜன. 6
வவுனியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வருகை தந்திருந்தார். இதன் காரணமாக மக்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டனர். ☞ 11

இராணுவச் சிற்றுண்டிச்சாலை அருகே

## ஐஸ் போதையுடன் இளைஞர்கள் கைது

முல்லைத்தீவு, ஜன. 6
புதுக்குடியிருப்பு - தேராவில் பகுதியில் உள்ள இராணுவத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு அருகில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த ☞ 11



வவு.பொலிஸார் பலப்பிரயோகம்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மீது அடாவடி!

இருவர் கைது: ஒருவர் மறியலில்

வவுனியா, ஜன. 6
ஜனாதிபதி ரணிலின் வருகைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளில் இருவரை, முழுமையான பலப்பிரயோகத்தின் மூலம் அநாகரீகமான முறையில் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் ☞ 11

டெங்கு தாண்டவம்

## ஜனவரி 8, 9, 10களில் முழுமூச்சு நடவடிக்கை

முப்படையினரும் களத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 6
இலங்கையில் டெங்குத் தொற்று தீவிரமாகப் பரவிவரும் நிலையில், ஜனவரி மாதம் 8, 9, 10ஆம் திகதிகளில் முழுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்து விலை உயர்வு

கொழும்பு, ஜன. 6

வற் அதிகரிப்பையடுத்து சிமெந்து மூடையின்விலை 150ரூபாமுதல் 350 ரூபா வரை உயர்த்தப்பட்டுள்ளது. 50 கிலோ எடையுள்ள சிமெந்து மூடையின் விலை 2 ஆயிரத்து300 ரூபாவாகவும், மேலும்சில நிறுவனங்களில் 2 ஆயிரத்து450 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-இ)

# முருங்கைக்காய் கிலோ 3000/=

யாழ்ப்பாணம், ஜன. 6

திருநெல்வேலிச் சந்தையில் நேற்று முன்தினம் முருங்கைக்காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டது.

முருங்கைக்காய் சீசன் தற்போது இன்மையாலும் மழையால் பாதிக்கப்பட்டதனாலும் அவற்றுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டுச் சந்தையில் தற்போது முருங்கைக்காய் கிலோ 3 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (ச-17)

# வாகனப் பதிவுக்கு வரி எண் கட்டாயம்

கொழும்பு, ஜன. 6

பெப்ரவரி மாதம் முதல் வாகனப் பதிவு மற்றும் வாகனப் பரிமாற்றத்துக்கு வருமான வரி இலக்கம் (TIN எண்) கட்டாயம் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வருமான வரி இலக்கம் இன்றி எந்தச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மீன்பிடிப் படகில் போதைப்பொருள்

கொழும்பு, ஜன. 6

மீன்பிடி இழுவைப் படகிலிருந்து 278 பொதிகளில் 300 கிலோ உயிர் கொல்லி ஹெரோய்ன் மற்றும் உயிர் கொல்லி ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டன என்று கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

காலி கடற்பரப்பில் நின்றிருந்த மீன்பிடி இழுவைப் படகிலிருந்தே குறித்த போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன. (ச-இ)

# பராமரிப்பற்ற காணிகள், வீடுகளே பெரும் பிரச்சினையாகவுள்ளன

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 6

**டெங்குக் கட்டுப்பாட்டை முன்னெடுக்கும்போது யாழ்ப்பாணத்திலுள்ள பராமரிப்பற்ற வீடுகள் மற்றும் காணிகளே எமக்குப் பிரச்சினையாகவுள்ளன என்று யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பருவப்பெயர்ச்சி மழைக்கு முன்னராக கடந்த செப்ரெம்பர் மாதம் மாவட்டச் செயலருடன் பேச்சு நடத்தினோம். டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்தினோம். கிராம மட்டத்தில் கூட்டங்களையும் நடத்தினோம்.

அதையும் மீறி டெங்கு பரவியமைக்கு, அசாதாரண மழை வீழ்ச்சி மற்றும் தொடர்ச்சியாக இரண்டு மூன்று நாள்களுக்கு சூரிய வெளிச்சமின்மை, இலங்கையில் பரவக் கூடிய வழமைக்கு மாறான டெங்குத் தாக்கம் என்பனவாகும். தற்போது டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளோம். எமக்கு ஆள்களற்ற - பராமரிப்பற்ற காணிகள், வீடுகள் பிரச்சினையாகவுள்ளன.

இது தொடர்பில் அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்த உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக பிரதம செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்- என்றார். (ஓ-125)

# 13 பிரதேச செயலர் பிரிவுகளில் டெங்கு நோய் பரம்பல்

யாழ்ப்பாணம், ஜன. 6

மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்வதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் தற்போது டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாகியுள்ளது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 70 தொடக்கம் 100 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றார்கள். கடந்த மாதம் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலே டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக காணப்பட்டது.

இந்த வருடத்தின் முதல் மூன்று நாள்களில் 282 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளார்கள். டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை விரைவுபடுத்தப்பட்டுள்ளது. வீடு வீடாகச் சென்று டெங்கு கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

டெங்குத் தொற்றுக்குள்ளானவர்கள் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவமனையை நாடுவதன் ஊடாக உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும் - என்றார். (ஓ-26)

# யாழில் சின்னம்மை தடுப்பு மருந்தேற்றல்

## இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 6

கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் 71 குழந்தைகள் சின்னம்மையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இனங்காணப்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்தேற்றல் இன்று ஆரம்பமாகவுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2021ஆம் ஆண்டு மே முதல் மீண்டும் பரவ ஆரம்பித்த சின்னம்மை நோயால், கடந்த ஆண்டு மே மாதம் முதல் இற்றை வரை 700 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 80 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பமாகியுள்ளது. யாழ். மாவட்டம் உட்பட ஒன்பது மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டம் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை முதல் 6 மாதம் முதல் 9 மாதம் வரையான ஆயிரத்து 850 குழந்தைகள் இனங்காணப்பட்டுள்ளனர். மேலும் யாருக்காவது சந்தேகம் இருந்தால் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியை தொடர்புகொள்ள முடியும் - என்றார். (ஓ-125)

## யாழ். போதனாவில்


# புத்தாண்டு தினத்தன்று 22 குழந்தைகள் பிறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் புத்தாண்டு தினத்தன்று 22 குழந்தைகள் பிறந்துள்ளன. 9 ஆண் குழந்தைகளும் 13 பெண் குழந்தைகளும் பிறந்தன. (ச-17)

# கரையொதுங்கிய மர்மப்பொருள்!

யாழ்ப்பாணம், ஜன. 6



வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஒன்பதாம் வட்டாரம் அரசடி முருகன் கோவிலடியில் மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியது. குறித்த பொருளை பொதுமக்கள் பார்வையிட்டு வருவதுடன் பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

குறித்த பொருள் கப்பலில் இருந்து தவறி விழுந்து கரையொதுங்கியிருக்கலாமென சந்தேகம் வெளியிட்டனர். அண்மைய நாள்களாக உடுத்துறை வேம்படி, நாகர்கோவில், உடுத்துறை ஆகிய இடங்களில் பல்வேறு விதமான மர்மப் பொருள்கள் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது. (ரி-27-100)

# கடல்வழி சட்டவிரோத நடவடிக்கை கடந்த ஆண்டு 349 பேர் கைது

மன்னார், ஜன. 6

2023இல் கடல் வழியாக போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 349பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

2023இல் நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் 715 கிலோவுக்கும் அதிகமான உயிர்கொல்லி ஹெரோய்ன், 3 ஆயிரத்து 711 கிலோவுக்கு மேல் கேரளக் கஞ்சா 50 கிலோவுக்கு மேல் உள்ளூர்க் கஞ்சா, 140 கிலோவுக்கு மேல் ஹாஷிஸ் மற்றும் 11 கிலோவுக்கும் அதிகமான கிரிஸ்டல் உள்ளிட்ட கணிசமான அளவு சட்டவிரோதப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 187 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ-213)

# மணலுடன் சிக்கிய டிப்பர்

பூநகரி சாமிப்புலம் கிராமத்தில் மணலுடன் சென்ற டிப் பரை விசேட அதிரடிப் படையினர் கடந்த புதன்கிழமை மடக்கிப்பிடித்துள்ளனர். பிடிக்கப்பட்ட டிப்பர் மணலுடன் பூநகரி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது. (ஓ-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெற்பயிர்களை சிதைத்த யானை



முல்லைத்தீவு, ஜன. 6

**காட்டு யானைகளால் நெற்செய்கைக்கு அழிவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.**

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட இடைக்கட்டு குளத்தின் கீழ் விவசாயம் செய்துவரும் விவசாயிகளின் நெற்செய்கை காட்டுயானையால் தொடர்ச்சியாக நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் அறுவடைக்கு 15 நாள்கள் இருக்கும் நிலையில் நெற்பயிர்களை காட்டுயானைகள் நாசம் செய்துவருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். நேற்றுமுன்தினம் இரவும் ஆறுக்கு மேற்பட்ட காட்டுயானைகள் வந்து நெற்பயிர்களை நாசம் செய்துள்ளன. (ஒ-19)

## எலிக்காய்ச்சல் தொடர்பில் வவு. மக்களுக்கு எச்சரிக்கை

வவுனியா, ஜன. 6

வவுனியா மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் பரவுவதால் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஈரமான, சேறு நிறைந்த இடங்களில் வேலை செய்பவர்கள் அல்லது வயல்களில் வேலை செய்வோர் தங்கள் கால்களில் காயங்கள் அல்லது தோல் நோய்கள் இருப்பின் அவதானமாக இருத்தல் வேண்டும். காய்ச்சல், தலைவலி, உடல் வலி என்பன ஏற்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவும்.

அண்மையில் செட்டிகுளம், முகத்தான் குளத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞர் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-110)

## தலைமன்னாரிலிருந்து கடத்திய தங்கம் பறிமுதல்

### திருச்சி சுங்கப் பிரிவு அதிரடி

கொழும்பு, ஜன. 6

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சட்டவிரோதமாகக் கடல் வழியாக படகில் கடத்திச்செல்லப்பட்ட 4.50 கோடி ரூபா பெறுமதியான 7.70 கிலோ தங்கம் திருச்சி மத்திய கியூ பிரிவு சுங்கத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தலைமன்னாரிலிருந்து கடல் வழியாக ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுக கடற்கரைக்கு தங்கம் கடத்தி வரப்படுகிறது எனக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது. இதன்போது அதிகாரிகளைத் தாக்கி தங்கத்தை விட்டுச் சென்றவரை தேடும் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது. (ச-100)

## அவயம் இழந்தோருக்கு செயற்கை அவயவம்!

போரால் கால்களை இழந்த மாற்றுத் திறனாளிகளுக்கு அமைச்சர் பந்துல குணவர்த்தன செயற்கைக் கால்களை நேற்று முன்தினம் வழங்கி வைத்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தால் 101 பேரின் பெயர்கள், ஜனாதிபதி செயலகத்துக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அவர்களுக்கே ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் முடிந்த பின்னர் அமைச்சர் வழங்கி வைத்தார். (ஒ-125)

## விஸ்தரிக்கப்படவுள்ளன இடர் முகாமைப் பிரிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 6

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் மாவட்டச் செயலகத்திலும் அமைந்துள்ள இடர் முகாமைத்துவப் பிரிவுகளுக்கு விசேட வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. உலக வங்கியின் அனுசரணையில் இந்த விசேட செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென மாவட்டச் செயலக வளாகத்தில் ஆயிரத்து 200 சதுர அடி நிலம் ஒதுக்கப்படுகிறது.

அவசர செயற்படுத்தும் மையம், மாவட்ட நிலையம், 24 மணிநேர தொடர்பு நிலையம், தொடர்பாடல் வலையமைப்பு, முன்னெச்சரிக்கை அறிவிப்பு மையங்கள் என்பன இதில் அமையவுள்ளன. (ச-125)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்று வெள்ளிக்கிழமை 'நாள் கடற்றொழில்' ஆரம்பிக்கப்பட்டது. பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளாரின் ஆசீர்வாதத்துடனும் ஊர்மக்களின் ஆதரவுடனும் சுபநேரத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-27)



# புதினம் தெரியுமோ?

ரணில் முந்தநாள் யாழ்ப்பாணத்துக்கு வந்தவரெல்லோ. அப்ப எல்லா நிகழ்ச்சியும் முடிச்சிட்டு பொழுதுபட, ஒரு விடுதியில யாழ்ப்பாணத்தில உள்ள புத்திஜீவியளைச் சந்திச்சு, இரவுச் சாப்பாடும் குடுக்கிறதெண்டு ஏற்பாடு செய்திருந்தவை. புத்திஜீவியள் எண்டால் பெரிய பெரிய படிப்பெல்லாம் படிச்சு, இந்தச் சமூகத்துக்கும், மொழிக்கும், நாட்டுக்கும் தங்கட மூளைவளத்தைப் பாவிச்சு முன்னேற்றங்களைக் கொண்டுவந்த ஆக்களைத்தான் சொல்றவை. முந்தியெல்லாம் சிவத்தம்பி, வித்தியானந்தன், துரைராஜா மாதிரி கனபேர் எங்களிட்ட இருந்தவை. ஆனால் இப்ப கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான மாதிரி புத்திஜீவியளைக் கண்டுபிடிக்கிறதே பெரும்பாடாக் கிடக்குது. கம்பஸில படிப்பிக்கிறவையைத்தான் இப்ப புத்திஜீவியள் எண்டு ஆலையில்லா ஊருக்கு இலுப்பம்பூ கிடைச்சமாதிரி திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியிருக்கு.

அப்பிடியான காலகட்டத்தில ரணில் வைச்ச டின்னர் பார்ட்டியில கிட்டத்தட்ட 100 புத்திஜீவியள் போனவையெண்டு கேட்டவுடன பட்சிக்குத் தலை கிறுகிறுவெண்டு சுத்தத் தொடங்கிட்டுது. இப்பிடியெல்லாம் புத்தியைச் சீவி வைச்சிருக்கிற ரணிலின்ர டின்னர் பார்ட்டிக்குப் போன அந்த நூறுபேரும் ஆரெண்டு நினைக்கிறியள்? அரைவாசிப்பேர் வீணைவாசிக்கிற கட்சிக்காரராம். அவையை விட கள்ள மண் கடத்துறவை, கள்ளக்காணி பிடிக்கிறவை, அமைச்சருக்கு தாளம் போடுறவை, கொஞ்ச அதிகாரிமார் இவையள் தான் அந்தப் புத்திஜீவிகளாம். கம்பஸில படிப்பிக்கிறவை கூடப் போகேலையாம். தங்களுக்கு வேண்டப்பட்ட ஆக்களை மட்டும் கூப்பிட்டு ரணிலோட கதைக்க விட்டு, சாப்பாடு குடுக்கிறதுக்குத்தான் ஒரு கட்சிக்காரர் இப்பிடி போனவை எல்லாருக்கும் புத்திஜீவி எண்டு பட்டம் குடுத்துக் கௌரவிச்சிருக்கினம் போல. ஏற்கனவே காசு குடுத்தால் கலாநிதிப்பட்டத்தை வாங்கக்கூடியதாக இருக்கு. அதால ஓசியில தங்களுக்குத் தெரிஞ்சவைக்கு புத்திஜீவி எண்டு பட்டம் குடுக்கிறதொண்டும் பிழையில்லைத்தான். ஆனால் என்னதான் பெயின்ற் அடிச்சாலும் சிலரின்ர சாயம் வெளுக்கிறது வழமை. அதைமாதிரி புத்திஜீவி எண்ட முகமூடியோட போன கனபேர், சாப்பிட்டு முடிஞ்சவுடன ஓடிப்போய் ரணிலைச் சுத்தி வளைச்சு செல்லப்பிள்ளையளா மாறிட்டினம். அப்பவே அந்தாளுக்கு விளங்கியிருக்கும், இவையள் புத்திஜீவியள் இல்லை ஓசிச்சாப்பாட்டுக்கும் செல்பி எடுக்கவும் தான் வந்தவையெண்டு. நீங்கள் ஓசிச்சாப்பாடு சாப்பிடுங்கோ, வளைச்சு வளைச்சு செல்பி எடுங்கோ. ஆனால் புத்திஜீவியள் எண்ட பேரில போய், உண்மையான புத்திஜீவியளைக் கேவலப்படுத்தாதையுங்கோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## கன்னி

பிரச்சினைகளைக் கண்டு அலட்டிக்கொள்ளாத நீங்கள், எதுவாக இருந்தாலும் சந்திக்க ஒருபோதும் தயங்கமாட்டீர்கள். எளிமையான வாழ்க்கையும், எதார்த்தமான பேச்சும் கொண்ட நீங்கள், மனச்சாட்சிக்கு மதிப்பளித்து நடப்பவர்கள்.

சுக்கிரனும், புதனும் சாதகமான நட்சத்திரத்தில் சென்று கொண்டிருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் பிரச்சினைகளைச் சமாளிக்கும் தைரியம் பிறக்கும். கோபம் குறையும். செலவுகள் அடுத்தடுத்து வரும். கணவர் ஆதரவாகப் பேசுவார். குடும்பத்தில் சந்தோஷம் வரும். உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் செலவுகள் உங்களைத் துரத்தும். பயணங்களும், அலைச்சல்களும் அடுத்தடுத்து இருக்கும்.

30.04.2024 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 8 ஆவது வீட்டில் மறைந்திருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும் இருந்தாலும் எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். சொந்தபந்தங்களுக்காக அலைய வேண்டி வரும். கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள்.

01.05.2024 முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்கு 9 ஆம் வீட்டில் குருபகவான் அமர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். வி.ஐ.பி.கள் அறிமுகமாவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் நடக்கும். மனைவியுடன் இருந்த மோதல்கள் நீங்கும். குழந்தைப் பாக்கியம் உண்டாகும்.

தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். மனக்கசப்புகள் நீங்கும். எதிர்பார்த்து காத்திருந்த அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும்.

இந்த வருடம் முடிய உங்கள் ராசிக்குள் கேதுவும், 7ம் வீட்டில் ராகுவும் அமர்கிறார்கள். கேது ராசிக்குள் வருவதால் தலைச் சுற்றல், குமட்டல், நாக்கில் கசப்பு வந்து நீங்கும். சில நேரங்களில் முன்கோபத்தால் எடுத்தெறிந்து பேசுவீர்கள். நேரம் கிடைக்கும் போது யோகா, தியானம் செய்யத் தவறாதீர்கள். எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது. 7ம் வீட்டில் ராகு அமர்வதால் கணவன் - மனைவிக்குள் சந்தேகத்தால் அடிக்கடி சண்டை வரும். மனைவி வழி உறவினர்களைப் பகைத்துக் கொள்ளவேண்டாம்.

இந்த ஆண்டு முழுவதும் சனிபகவான் உங்கள் ராசிக்கு 6வது வீட்டிலேயே வலுவாக இருப்பதால் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் சமாளிக்கக் கூடிய மனோ பலம் உங்களுக்குக் கிடைக்கும்.

**வியாபாரிகளே!** முடங்கிக் கிடந்த நீங்கள் புத்துயிர் பெறுவீர்கள். பழைய கடையை புதுப்பித்து விரிவுபடுத்துவீர்கள். கூட்டுத் தொழிலில் விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வருவார்கள்.

**உத்தியோகஸ்தர்களே!** உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். இழுபறியாக இருந்த பதவியுயர்வு இப்போது கிடைக்கும். சம்பளம் கூடும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும்.

**இந்தப் புத்தாண்டு உங்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவதாகவும், அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கி சமூகத்தில் அந்தஸ்தை தருவதாகவும் அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம் :** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

## நயினை அம்பாள் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 6

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் புனராவர்த்தன, அஸ்டபந்தன, ஸ்வர்ண பந்தன சமர்ப்பண உத்தமோத்தம த்ரயத்திரும்சத் குண்டபக்ஷ மஹாயாக, பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5மணிக்கு கிரியைகளோடு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 22ஆம்,23ஆம் திகதிகளில் காலை 7மணி முதல் மாலை 5மணி வரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும் என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளனர். (ரி)

## புதியபாட வகுப்புகள் தைப்பூசத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 6

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையத்தால் புராண படனம், கதாப்பிரசங்கம், சமஸ்கிருதம் ஆகிய புதிய பிரிவு வகுப்புகள் எதிர்வரும் 25ஆம் திகதி தைப்பூசத் திருநாளில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆறுமாதகாலத்தைக் கொண்டமைந்த இந்தப் பயிற்சி வகுப்பு சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

இணையவிரும்புவோர் இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களம்,வடபிராந்திய அலுவலகம், குருகுலம், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் அறிவித்துள்ளார். (ச)

## குருதிக்கொடை

செல்வச்சந்நிதி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நிகழ்வு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்கு அருகில் தொண்டைமானாறு தெற்குப் பொதுநோக்கு மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை இடம்பெறவுள்ளது. (ரி-66)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 6

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-17)

## கிளறப்பட்ட வீதியை புனரமையுங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 6

மானிப்பாய், காரைநகர் பிரதான வீதியில், யாழ்ப்பாணம் முதல் வழக்கம்பரை வரையான வீதி புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் வழக்கம்பரை முதல் பொன்னாலை வரையிலான வீதி ஜே.சி.பி. வாகனத்தால் கிளறப்பட்டுள்ள நிலையில் அந்த வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாய்ப்பந்தலில் வல்லவர்


வடக்கு மாகாணத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 4 நாள் பயணமாக வருகை தந்திருக்கின்றார். இதில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்தியிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணத்தின் நோக்கம் தெளிவானது. வெறும் கையால் முழம்போடலாம் என அவர் நினைக்கின்றார். ஏனெனில் இந்தப் பயணத்தில் இதுவரை ரணில் வெளியிட்ட கருத்துகள் அதனைத்தான் வெளிப்படுத்தியிருக்கின்றன.

கடந்த ஆண்டு தைப்பொங்கலையொட்டி யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ். மாவட்டச் செயலகத்தில் கூட்டத்தை நடத்தியிருந்தார். அந்தக் கூட்டத்தில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். குறிப்பாக வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இன்னமும் விடுவிக்கப்படாத பலாலி தொடர்பில் பல சாதகமான வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ள ஆலயங்களுக்கு வழிபடச் செல்வது தொடர்பிலும் சில விடயங்களைச் சொல்லியிருந்தார். ஆனால் இதுவரை அவை எவையும் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையிலேயே யாழ். மாவட்டச் செயலகத்தில் மீண்டுமொரு முறை கூட்டத்தை நேற்றுமுன்தினம் நடத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இந்தக் கூட்டத்தில் கூட க் கடந்த கூட்டத்தின் விடயங்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டன. இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பியதுடன் மட்டும் தன் அக்கறையை நிறுத்திக் கொண்டார். கடந்த கூட்டத்தில் பேசப்பட்டு இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு சில நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இறுதியில் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி முடிவு எடுக்க வேண்டிய கட்டத்திலேயே அவை கிடப்பில் போடப்பட்டிருந்தன. கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அரசியல் விருப்பு இருந்திருந்தால் அவை நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்கும். வெறுமேன வாய்ப்பந்தல் போடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் பேசுவதால் எதுவும் நடக்காது.

இப்போதும்கூட நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில், கடந்த ஆண்டு இடம்பெற்ற கூட்டத்தின் தீர்மானங்களுக்கு முடிவு வழங்கப்படவில்லை. வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சில விவகாரங்களுக்கு அடுத்த மாதம் கொழும்பில் தேசியப் பாதுகாப்புச் சபையில் ஆராய்வதாக ஜனாதிபதி பதிலளித்திருக்கின்றார். அந்தப் பதிலுடன் அந்த விடயமும் அப்படியே நடைபெறாமல் கிடப்பில்போடப்படும்.

இவற்றுக்குமேலாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குப் பயணத்தில் நடத்திய சந்திப்புகளின்போதெல்லாம், இந்தப் பிரதேசத்திலிருந்து எவற்றையெல்லாம் வைத்து காசாக்கலாம் என்பதைப்பற்றியே பேசினார். அரசாங்கத்திடமிருந்து பணம் கிடையாது. உங்கள் பிரதேச வளங்களை வைத்தே உங்களை வளப்படுத்திக் கொள்ளுங்கள் என்பதுதான் அவரது போதனையாக இருந்தது. இதன் ஊடாக அவர் தெளிவான ஓர் செய்தியை வடக்கு மக்களுக்குச் சொல்லியிருக்கின்றார். இங்குள்ள வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படும். அதை நீங்கள் எதிர்த்தாலும் நடந்தே தீரும். குறிப்பாக மன்னாரில் காற்றாலை மின் உற்பத்திக்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க குறித்த திட்டத்தை சுட்டிக்காட்டியே இத னைச் சொல்லியிருக்கின்றார் என்பது முக்கியமானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பயணத்தின் போது தமிழ் மக்கள் தங்களின் உடனடி அல்லது நீண்டகாலப் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வை முன்வைக்கலாம் என்று எதிர்பார்த்திருந்தனர். அவரோ அவை தொடர்பில் அலட்டிக்கொள்ளாமலே இருந்துவிட்டார்.




# செலவை மக்கள் ஏற்றால் தேர்தலில் இறங்குவேன்

## குமார வெல்கம புது நிபந்தனை



**கொழும்பு, ஜன. 6**

**தேர்தல் செலவை மக்கள் பொறுப்பேற்றால் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு நானும் தயாராகவே இருக்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

'ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு எனக்கும் தகுதி உள்ளது. ஆனால் அத்தேர்தலை எதிர்கொள்ள பண பலம் அவசியம். என்னிடம் தற்போது பணம் இல்லை. முன்னர் மக்கள்தான் மேடை அமைப்பார்கள், போஸ்டர் ஒட்டுவார்கள். அந்தக் கலாசாரம் தற்போது மாறியுள்ளது. மக்கள் தேர்தல் செலவை பொறுப்பேற்றால் களமிறங்க நான் தயார்' - என்றார். (ஓ-44)

# தேர்தலுக்கு தயார்

## மொட்டு வீறாப்பு

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு முன்கூட்டியே பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால் அதனை எதிர்கொள்வதற்கும்பொது ஜன பெரமுன தயார் என்று அக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

வற் அதிகரிப்பு பற்றி தற்போது பேசுகின்றனர். அதனை நாம் குறைத்ததால் தான் எம க்கு எதிராக நீதிமன்றம்சென்றனர். ஜனாதிபதி வேட்பாளர் யாரென தற்போது கூற முடியாது. ஆனால் அந்தப் பட்டியலில் எனது பெயர் இல்லை என்பதை மட்டும் கூறமுடியும்' - என்றார். (ஓ-44)

# பிரதமர் வேட்பாளர் நாமல் ராஜபக்சவே

கொழும்பு, ஜன. 6

பொதுஜன பெரமுனக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நாமல் ராஜபக்ச என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், ராஜபக்ச குடும்ப உறுப்பினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

'முதலில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை பஸில் ராஜபக்ச பெற்றுவிட்டார். ஏப்ரல் மாதத்தில் திகதி நிர்ணயிக்கப்படும். நாமல் ராஜபக்சதான் பிரதமர் வேட்பாளர். ஜனாதிபதித் தேர்தலில் ரணிலைக் களமிறக்கும் பஸிலிடம் ஆரம்பத்தில் இணக்கம் இருந்தாலும் மஹிந்த அதனை விரும்பவில்லை. ராஜபக்சக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றோம் எனச் செயற்படும் சிலர்கூட பஸில் ராஜபக்சவின் ஏற்பாடுதான். ராஜகிரியவில் அண்மையில் திறக்கப்பட்ட அலுவலகம் ஒன்றுகூட மொட்டுக் கட்சியின் தேர்தல் அலுவலகமாகச் செயற்பட்ட இடம்தான்' - என்றார். (ஓ-44)

# ஏப்ரலுக்குள் தேர்தல்

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பார் என தான் நம்புகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். (ஓ-44)

# சந்திப்பு

கொழும்பு, ஜன. 6

ஐ.நா. பிரதிச் செயலர் நாயகமும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டதின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளருமான கனி விக்கினராஜா, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பின் போது ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் தொடர்ச்சியான உதவிகள், டிஜிற்றல் மயமாக்கல், பொது நிறுவனங்களை நவீனமயப்படுத்தல், காலநிலை மாற்றம் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ஓ-6)

## நாளை

07.01.2024
**ஞாயிற்றுக்கிழமை**
**மார்கழி 22**
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 09.32 - 11.02
ராகுகாலம் : 05.02 - 06.32

## நாளொரு நல்வார்த்தை

**உங்களுக்கான நேரம் குறைவானது, எனவே வேறொருவரின் வாழ்க்கையை வாழ்ந்து அதை வீணடிக்க வேண்டாம்.**

**- ஸ்டீவ் ஜாப்ஸ்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் நிகழ்ச்சிகள்

# இந்தியத் தொலைக்காட்சிகளில் இலாப நோக்கிலேயே நடக்கின்றன

### பாடகர் பாலக்காடு சிறீராம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 6**

**தொலைக்காட்சி இலாபத்துக்காக பாடல் போட்டிகளை நடத்தக் கூடாது என இசையமைப்பாளரும் பாடகருமான கேரளா பாலக்காடு சிறீராம் தெரிவித்தார்.**

யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தொலைக்காட்சியில் பாடும் போது சங்கீதத்துக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும்.

இந்தியத் தொலைக்காட்சிகள் இலாப நோக்கில் இயங்குகின்றன. போட்டியில் பங்குபற்றும் பாடகர்களை எத்தனையாவது தரத்துக்கு மேலே கொண்டு போகிறோம் என்று சொல்லி உழைக்கும் தொலைக்காட்சிகள் அவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதில்லை.

நடுவர்கள் ஜானகி அம்மாவையே அசைக்க வைத்த பாடல் என்று பாடல் போட்டியில் கலந்து கொண்டவரை பெருமை பேசுவார்கள். ஆயிரக்கணக்கில் பாடல்கள் பாடிய ஜானகி அம்மாவையே அசைக்க வைத்த பாடல் என்று எப்படிச் சொல்ல முடியும்?

சங்கீதம் படித்துப் பாடி பிரபல்யமான ஜானகி அம்மாவை முறையாகச் சங்கீதம் படிக்காதவர்கள் தொலைக்காட்சி பாடல் போட்டியில் கலந்துகொண்டவர்களை ஜானகி அம்மாவை மிஞ்சி விட்டார்கள் என்று எப்படிச் சொல்வது?

யாழ்ப்பாணத்தில் தவில், நாதஸ்வரம், வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், பழகுகிறார்கள்.

இப்படி அடிப்படை வசதிகளுடன் சங்கீதம் படித்தால் தான் அதற்கு உயிர் இருக்கும். கடைசி வரை உயிர் மூச்சு இருப்பது போல் சங்கீதம் நிலைக்க வேண்டும் என்றால் முறைப்படி சங்கீதம் படித்துவிட்டு பாடவேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து பங்கேற்ற பிள்ளை 'ஸரிகம' பாடல் போட்டியில் வெற்றிபெற்றமை வரவேற்கத் தக்கது.

ஆனால் அந்தப் பிள்ளை முறைப்படி சங்கீதம் படித்து தனது எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டும் - என்றார். (ஒ-20)

## மதிப்பளிப்பு நிகழ்வும் பாராட்டு நிகழ்வும்

தென்மராட்சி இந்து அந்தணர் குருமார் ஒன்றியத்தின் முதியோர் மற்றும் மாணவர்கள் மதிப்பளிப்பு நிகழ்வும், பாராட்டு நிகழ்வும் சாவகச்சேரி வாரிவன நாதர் சிவன் கோவில் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதேசத்தில் வசிக்கும் அந்தணப் பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும் மதிப்பளிப்பு இடம்பெறவுள்ளது. (ரி-9)



## பாக். பாதுகாப்புச்செயலர் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

கொழும்பு, ஜன. 6

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலர் லெப்டினன் ஜெனரல் ஹமூத் உஸ் சமான் கான் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜெயவர்த்தனபுர கோட்டையில் அமைந்துள்ள பாதுகாப்புத் தலைமையகத்தில் இடம்பெற்ற நான்காவது பாகிஸ்தான்-இலங்கை இராணுவ கலந்துரையாடலில் பங்கேற்க அவர் இலங்கை வந்திருந்தார். (ச-6)

## ரணிலின் பாதுகாப்பு அணியை படம் எடுத்த இளைஞன் கைது

வவுனியா, ஜன. 6

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாகனத் தொடரணியை ஒளிப்படம் எடுத்த சந்தேகத்தில் பூனாவையைச் சேர்ந்த இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா விமானப்படைத் தளத்தில் ஜனாதிபதி விசேட விமானத்தில் வருகை தந்து வன்னி அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் நேற்றுக் கலந்துகொண்டார்.

பாதுகாப்பு வாகனத்தொடரணி சென்று கொண்டிருந்த நிலையில் அதனை இளைஞரொருவர் ஒளிப்படம் எடுத்தமையை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் இளைஞனை கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். (ஒ-110)



## விமானப்படைத் தளபதி அமெ.தூதுவர் சந்திப்பு

கொழும்பு, ஜன. 6

இலங்கையின் 19 ஆவது விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கை கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இலங்கையின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டார். (ச-6)

## ரணில் வருகை: கைதானோர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 4 பேர் நேற்றுமுன்தினம் மதியம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் இரவு விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஒ-27)

## கில்மிஷாவுக்கு ரணில் நேரில் வாழ்த்து!

யாழ்ப்பாணம், ஜன. 6

இந்தியாவின் ஸீ தமிழ் நடத்திய 'ஸரிகமப' இசை நிகழ்வில் மகுடம் சூடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கில்மிஷாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது யாழ்ப்பாண பயணத்தின்போது அழைத்து நேரில் பாராட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கலந்துரையாடலிலேயே கில்மிஷாவைப் பாராட்டியுள்ளார். (ஒ-100)





## முல்லைத்தீவில் கில்மிஷா கௌரவிப்பு

முல்லைத்தீவு, ஜன. 6

ஈழத்து இசைக்குயில் உதயசீலன் கில்மிஷாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

மகரந்தம் கலை இலக்கிய மன்றம், யோகம்மா கலைக்கூடம் என்பன முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துடன் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

நிகழ்வில் சிறுவர்களின் ஆடல், பாடல் முதலான கலை ஆற்றுகைகள் சிறப்புற்றன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன், பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் அதிதிகளாகப் பங்கேற்றனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 . 01 . 1948



மறைவு
18 . 12 . 2022

## அமரர் சின்னவன் இராசேந்திரன் (காந்தி)

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன்
நம்பிக்கையில் ஈடுபட்டு
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய் பாடுபட்டு
பார்போற்ற வாழ்ந்த எம்முயிர்த்தெய்வமே
விண்ணுலகம் சென்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சைவிட்டு
அகலவில்லை. நீங்காத நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**


**வரணி வடக்கு,**
**வரணி.**

(CS 53397) (N.1)

**நினைவுடன்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

மண்ணில்
08 . 11 . 1946



விண்ணில்
04 . 01 . 2024

## இரத்தினம் செல்வரத்தினம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் செல்வரத்தினம் நேற்று முன்தினம் (04.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிளமென்ற் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயாவின் அன்புக் கணவரும், அழகுராணி (London), தனபால் (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லோறன்ஸ் (London), நந்தியா (Canada), ஜெயம் (Germany), ஜெயக்குமார் (Germany), காலஞ்சென்ற ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.ஜெகன் (Teaching Hospital - Jaffna.), காலஞ்சென்ற ஜெனி, ஜெனா (DO, DS Office, Nallur), ஜெடின் (Chemistry Teacher, MN/Adampan MMV), Dr. ஜெனன் (BSMS) ஆகியோரின் அன்புத் தந்தையும், சில்வியா (Physics Teacher), நிரூஜன் (World Vision), மேரி கொன்சலா (Teacher, J/Anaicoddai RCTMS), Dr.தர்சிகா (BSMS) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவிர்தன், ஜெரூஷா, சாம்தன், ஜெறோன், டர்னிஸ், யூட் மடுஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி இன்று (06.01.2024) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**உயரப்புலம்,**
**ஆனைக்கோட்டை**

(CS 53406) A-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பெயர் மாற்றம்

39. இந்துக்கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **இரத்தினம் யோகம்மா** ஆகிய நான் எனது பெயரை **இரத்தினம் யோகேஸ்வரி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **இரத்தினம் யோகேஸ்வரி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs.53410) (N.1)

**இரத்தினம் யோகேஸ்வரி**

## பெண் சுத்திகரிப்பாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் வெதுப்பத்திற்கு பெண் சுத்திகரிப்பாளர் தேவை. அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.

**077 713 1594, 021 222 9402**

## புதிய ஆண்டுக்கான புதிய பிரிவு ஆரம்பம்

தரம்-01 தொடக்கம் தரம்-03 வரையான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. வீடுகளில் வந்தும் கற்பிக்கப்படும்.

**074 179 3394**

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 07 . 1937



மறைவு
04 . 01 . 2024

## புவனேஸ்வரி பரராஜசிங்கம்

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வாழ்விடமாகவும், கனடா Scarborough ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் கடந்த (04.01.2024) வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கிளாக்கர்) நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற Railway Head Guard) அவர்களின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி (ஞானம் - கனடா), வரதராஜா (வரதன் - பிரான்ஸ்) அகியோரின் அன்புச் சகோதரியும், யசோதரன் (ராசன் - பிரான்ஸ்), யசோதா (பவா - கனடா), யசோக்குமார் (குமார் - பிரான்ஸ்), வசந்தகுமார் (வசந்தன் - டென்மார்க்), சுரேஸ்குமார் (சுரேஸ் - ஜேர்மனி), ரமேஸ்குமார் (ரமேஸ் - பிரான்ஸ்), கணேஸ்குமார் (கணேஸ் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலா, காலஞ்சென்ற கங்காதரன், கிரிஜா, சுதா, சந்திரா, விஜி, றஞ்சனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகராஜா மற்றும் சந்திரசேகரம் (அவுஸ்ரேலியா), காலஞ் சென்றவர்களான கோபாலசிங்கம், விஜயானந்தன் மற்றும் கௌரிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், யசிந்தா - சஞ்ஜீவ், நிரோஷ், அஜித் -மோனிக், சுபன், வனிதா - ஜொகான், சிவேத், நிவேதா - அன்சன், கீர்த்திகா, திவ்யா - சரத்ஹானந், ராகுல், சஞ்சா, சஜீவன், நிசாந்த், நிலா, சபீனா, யசிக்கா, பரிதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டேமியன், ஷனல், சிலியாஸ், லானா, சாஞ்ஜே, ரறோசெய்ன், எர்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.01.2024) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**கணேஸ் - மகன்**
**Mobile : +141 638 89478**

**பவா - மகள்**
**Mobile : +141 626 25121**
**Phone : +141 675 44715**

**சுபன் - பேரன்**
**Mobile : +164 798 25121**

(cs.53412) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு · 03 · 03 · 1944



இறப்பு · 05 · 01 · 2024

### அப்பையா அருளம்பலம்

(ஓய்வுபெற்ற பணியாளர் - யாழ். மாநகர சபை)

கோண்டாவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா அருளம்பலம் நேற்று (05.01.2024) வெள்ளிக்கிழமை நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா தம்பதியரின் அன்பு மகனும், கமலாறூத் அவர்களின் அன்புக் கணவரும், போல்ஹார்டிங் (ஆசிரியர், நவீல்ட் பாடசாலை, கைதடி), அருட்பணி ஸ்ரீபன் (பரி.யாக்கோபு ஆலயம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசீலி, ரவீந்திரவதனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யாபேஸ், சுசான ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சென். செபஸ்ரியார் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கன்னிமரியாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சென்.செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(CS 27571) A-1

தகவல்:
**பிள்ளைகள்.**
**076 6011 984**

## 30 ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்



மண்ணில் 22.08.1937 — விண்ணில் 06.01.1994

### அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில், வணிகர் மன்றம் முன்னாள் உரிமையாளர்,
அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி.

மன்ற சேவைக்கென வந்து அமரத்துவடைந்த அமரரின் நினைவு நாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2024) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

### வருடாந்த ஒன்றுகூடல்

யாழ்., ஜன. 6

உடுவில் பிரதேச செயலக வருடாந்த ஒன்றுகூடலும் பிரிவுபசார விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. உடுவில் பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ-ம-66)

### திருவாசக முற்றோதல்

யாழ்., ஜன. 6

உரும்பிராய் சொக்கநாதர் சிவாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(அ-ரி-66)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும்
மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சுப்பிரமணியம் வயிரவநாதன்



**மண்ணில் 07.10.1944** — **விண்ணில் 18.12.2022**

எம் ஆருயிர் தந்தையே
ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும்
அனுதினமும் நீங்கள் அருகில் இருப்பதை
- உணருகின்றோம்.
உருவமாய் இல்லை என்றாலும்
தெய்வமாய் எங்களுடன் இருந்து
- ஆசிபுரியுங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**
**சாந்தை சந்தி, மயிலிட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

**16ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 22.12.2023 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த
அமரர்

**செல்வரட்ணம் றுக்மணி (றுக்கான்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.01.2024) சனிக்கிழமை காலை கீரிமலை கண்டகி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியம் நாளை (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெற்று, அன்று மதியம் "செல்வமஹால்" மண்டபத்தில் (இல. 1229, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனோகர் - 077 843 2644
சதீஸ்குமார் - 077 4933 604
புவிரஞ்சினி - 077 6849 893
செல்வகுமார் - 077 002 1001

குடும்பத்தினர்.
இல.80/11, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 27582) A-1


# அச்சுவேலியில் குழுமோதல் 13 பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜன. 6



அச்சுவேலி, தென்மூலை பகுதியில் நேற்று இடம்பெற்ற குழு மோதலில் 13 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தாண்டு தினத்தன்று இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் நால்வர் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். ஓட்டோவொன்றும் சேதமாக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்றையதினம் அந்தப் பகுதியில் உள்ள இளைஞர் ஒருவரின் வீட்டில் பெற்றோல்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவமும் குழு மோதலாக மாறும் சாத்தியம் காணப்பட்டது. இந்த நிலையிலேயே இரு தரப்பிலிருந்தும் இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-23)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 15 . 12 . 1972



இறப்பு 06 . 01 . 2023

**செல்வராசா சண்முகராஜா**

(முன்னாள் இலங்கை பெற்றோலிய கூட்டுதாபன சாரதி)

அன்பிலும் பண்பிலும் பார்போற்ற மிளிர்ந்தவரே
உம் மானிட வாழ்வுதனில் தரணி போற்ற தடம் பதித்தீர்
இல்லறத்தில் நல்லறம் நாட்டினீர்
தம் புதல்வர்களுக்கு உற்ற தந்தையாய் பணியாற்றினீர்.

உன் கறைபடியாத கரம் ஆற்றிய இறைபணியும்
இடைவிடா நற்சமூகப்பணியும்
கற்றோர் முன்னோர் நிலையில் உன்பணிவும்
பெற்றோலியக் கடமை தனில் தடம் பதித்து
மிளிர்ந்து நின்ற உன் நற்பண்பும் - இத்தனையும்
இல்லை உன்பணி சொல்ல வார்த்தைகளும் இல்லை

சற்றும் எதிர்பாராமல் உன்கரம் இழந்து
மனம்கனத்திட வருடம் ஒன்று முடிந்தாலும்
சண்முகராசா உன்பெயர் உச்சரிக்காது
நிமிடங்களும் கடந்திட மறுக்கிறது.

விண்ணகத் தந்தையின் இல்லத்தில்
அழியா இன்பத்தைப் பெற்று மிளிர
உமக்காய் இறைவனை மன்றாடி
இம்மலரும் ஆண்டிலும் உம் பாதம் பணிகின்றோம்.

ஐயனார் கோயிலடி,
நாவற்குழி, கைதடி.

குடும்பத்தினர்.
076 997 1777

(CS 27574) A-1


# பூநகரி அபிவிருத்திக் கூட்டங்களில் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்?

கிளிநொச்சி, ஜன. 6

பூநகரி நகர அபிவிருத்திக்கு என நடத்தப்படும் கூட்டங்க ளில் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் மற்றும் கல்வியியலாளர்கள் புறக்கணிக்கப்படு கின்றனர் என்று குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பூநகரி நகர அபிவிருத்தி தொடர் பாக கடந்த 2ஆம் திகதி பூநகரிப் பிரதேசசபையில்நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்கள் எனச் சிலர் கலந்து கொண்ட கூட்டத்துக்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் அழைக்கப்படவில்லை.

பூநகரியில் கடந்த காலங்களில் பொது அமைப்புகளின் ஆலோசனைகள் இல்லாமல் அமைக்கப்பட்ட சந்தை, பேருந்துக் கட்டடத் தொகுதிகள் பொருத்தமற்ற இடத்தில் நகரத்திலிருந்து தொலைவில் அமைக்கப்பட்டதன் காரணமாக தற்போது அது ஒரு பயனற்ற கட்டடமாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் திட்டங்களில் பிரதேசத்தில் வாழ்கின்ற பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், கல்வியியலாளர்கள், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் அவசியமாகின்றன.

இதனை விடுத்து முன்னெடுக்கப்படும் திட்டங்கள் பயனற்றதாக மாறி விடும் என்பதால் எதிர்காலத்தில் அவர்களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பூநகரி பிரதேசசபைச் செயலர் இ.தயாபரனிடம் கேட்டபோது, கூட்டத்தை ஏற்பாடு செய்தது நகர அபிவிருத்தி அதிகார சபையே. கூட்டம் இடம்பெற்ற இடம்மாத்தி ரமே பூநகரி பிரதேசசபை. பிரதேசசபை நடத்தும் கூட்டங்களுக்கு முன்னாள் பிரதேசசபை உறுப் பினர்கள் அழைக்கப்படுகின்றனர் என்று குறிப்பிட்டார். (ஒ-13)


**மரண அறிவித்தல்**



**செல்வரட்ணம் ஜோர்ச் அரியரட்ணம்**

(முன்னாள் உதவி முகாமையாளர் - Singer Company)

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட S.ஜோர்ச் அரியரட்ணம் அவர்கள் 03.01.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் அன்னம்மா, தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற புஸ்பரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம், தங்கராணி, செல்வராணி மற்றும் புஸ்பராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராஜ் (ஜேர்மனி), ரகுராஜ் (சுவிஸ்), செல்வானந்தன் (Lanka Cement Ltd, முன்னாள் ஊழியர்), தேவரஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மனோகரி, யசோதினி, கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிழினி, கிறித்திஷா, அபிகேசன், லிதியா, நேசராஜ், துவாரகா, தினேஷ், சயந்தா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (07.01.2024) பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

168, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 922 3849
077 1617 564

(CS 27378) A-1


# நூல் வெளியீடும் கருத்தாடலும்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ் கண்ணனின் 'உரித்து' சிறுகதைகளின் தொகுப்பு நூல் வெளியீடும், கருத்தாடலும் நிகழ்வு கலாநிதி சு. குணேஸ்வரன் தலைமையில் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய இரவீந்திரசர்மா மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. பரணீதரன் நூல் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவசித்தாந்தத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செல்வமனோகரன் சிறப்புரையையும், ந. குகபரன், சி. விமலன் ஆகியோர் நூலின் மதிப்பீட்டுரைகளையும் ஆற்றவுள்ளனர். (ரி-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 30ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 22 . 08 . 1937

மறைவு 06 . 01 . 1994

## அமரர் ச.நமசிவாயம்

(அம்பிகா டிஸ்பென்சறி)

எங்கள் குடும்பத் தலைவரே
நீங்கள் வாழ்ந்து காட்டிய வழியில்
நாங்கள் வாழ்வதற்கும்
உங்கள் ஆத்ம சாந்தி அடையவும்
எங்கள் குலதெய்வம் நுனுவில் சிதம்பர
விநாயகனை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி!

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம்: 25.05.1953

மறைவு: 03.01.2024

## சுப்பிரமணியம் சிவராசா

(நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க ஓய்வுபெற்ற சாரதி MPCS)

கந்தரோடையை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவராசா கடந்த (03.01.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவமலரின் அன்புக் கணவரும், கந்தசாமி (இந்தியா), சண்முகராசா, வேலாயுதபிள்ளை (கனடா), காலஞ்சென்ற மயில்வாகனம், இராசரத்தினம் (கனடா), செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிதரன் (கனடா), சசிகலா, சுதாகரன் (கனடா), சுரேஸ்கரன், கஜேந்திரன், தேவரூபி (ஜேர்மனி), தேவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகுமார், சுதர்சன் (ஜேர்மனி), குலரஞ்சினி, விஜிதா, ஜெயபவாணி, சோபிகா, மதுசனா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷர்மிகா, கிஷாளினி, சாதுரியன், டிலக்சனா, பிரகாஸ், டக்சிகா, ஜன்சிகா, அபிசன், சஞ்சனா (ஜேர்மனி), சகானா, பிரணவன் (ஜேர்மனி), யதுசன், பிரபஞ்சனா (ஜேர்மனி), டர்மி, அஸ்மிதா, அக்சயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 4710 678
077 6055 638

(CS 27423) A-1

# பொன்னாவெளியில் தொடர்கிறது போராட்டம்

கிளிநொச்சி, பூநகரி பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக பொது மக்கள் ஆரம்பித்த இந்தப் போராட்டம் 155ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. வடக்கு மாகாணத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பூநகரிக்கும் செல்லவுள்ளார். இந்த நிலையில் இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-13)

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

**எம் இனிய உறவுகளுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்**

எம்மிடம் எல்லா இனத்தவர்களுக்கும் எல்லா மதத்தினருக்கும் அரசாங்க உத்தியோகம், உத்தியோகம் அல்லாதது, உள்நாடு வெளிநாடு, செவ்வாய் குற்றம் உள்ளது, இல்லாதது, சூரிய செவ். சகலருக்கும் பொருத்தமான மணமகன்கள், மணமகள்கள் ஏராளம் உண்டு. உங்களுக்கு பொருத்தமான வரன்களை எம்மால் விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: வீ.ஜெயந்தி
077 9733 183

(CS 27578) A-1

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் புத்தக சாலைக்கான வேலைவாய்ப்பு. யாழ். நகரில் உள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:
077 494 9683/077 077 6469

(CS 27572) A-1

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதியில் 5 1/2 பரப்புக் காணியுடன் 2 வீடுகள் குறைந்த விலையில் விற்பனைக்கு. மற்றும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி தெஹிவளை, கல்கிசை, கொட்டாஞ்சேனை, பருத்தித்துறை, பளையில் காணிகள், வீடுகள், கடைகள், விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 306 0013

## காணி விற்பனைக்குண்டு

கோப்பாய் மார்க்கம்புரை ஒழுங்கையில் பிரதான வீதியில் இருந்து 10 m தூரத்தில் நல்ல குடியிருப்பு சூழலில் அமைந்த 2 பரப்பு 4 குழி விஸ்தீரணமான காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

077 691 1888

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 581/25 இலக்க ஆதனமானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். கொழும்புத்துறையைச் சேர்ந்த யோசியாம்பிள்ளை டொமினிக் அல்லது யோசியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் யாழ் நொத்தாரிசு S.P. நவரட்ணம் என்பவர் முகதாவில் 1979.03.19 ம் திகதி 412ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறையில் "அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்" என்னும் பெயருடைய விஸ்தீரணம் நெற்பரப்பு 540 கொண்ட ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் என்பவர் முகதாவில் 2004.01.15 ம் திகதி 2015ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சவிரிமுத்து கிறிஸ்தோபர் காலமடைந்ததன் பின்னர் ஏகவாரிசான எனக்கடைந்த பிதாவழி முதுசமும் உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அற்றோணி திருமதி எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர என்பவர் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் என்பவர் முகதாவில் 2014.10.27 ம் திகதி 2213ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியா என்பவர் நொத்தாரிசு மரியதாஸ் மகிழினி மடோனா என்பவர் முகதாவில் 21.01.2019ம் திகதி 222ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி நாகலிங்கம் இராஜகுலேந்திரம் பெண் ஜெயசிறி இராஜகுலேந்திரனிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் நாகலிங்கம் இராஜகுலேந்திரம் பெண் ஜெயசிறி இராஜகுலேந்திரன் என்பவர் நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் என்பவர் முகதாவில் 27.04.2022ம் திகதி 14545ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி இராசேந்திரம் றெனிங்ஸ்ம் பெண் மேரிதிரேசாவிற்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று. யாழ்ப்பாண மாநர சபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/61 கொழும்புத்துறை இறை. **"அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமைடையும் மறுபிரிவுகளும்"** என்று வழங்கும் **"கொழும்புத்துறைத் தெருத்தோட்டம்"** நிலப்பரப்பு 375 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு நிலப்பரப்பு 376 குளி 12.8 இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு 222 குளி 3.92 இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088A/14ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 85 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1. இதனை அதே உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 21.12.2014 இல் வரைந்த முறையே 6088A - 85/14ம் இலக்கத்தில் தனியாக அளந்து வரைந்த நிலஅளவைப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்டபடியும் விஸ்தீரணம் நிலப்பரப(1) ஒன்றும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்.

இதன் எல்லை:- (குறித்த 6088Aம் - 85/14 ம் இலக்க நில அளவைப்படத்தின்படி)

**கிழக்கு** - குறித்த 6088Aம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 84 எனச்சுட்டப்பட்ட ஆதனம்.
**வடக்கு** - குறித்த 6088Aம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 82 எனச்சுட்டப்பட்ட ஆதனம்
**மேற்கு** - குறித்த 6088Aம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 86 எனச்சுட்டப்பட்ட ஆதனம்
**தெற்கு** - குறித்த 6088Aம் இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்ட ஆறு மீற்றர் அகலப்பாதையும் இதடங்கலும்

இன்னும் இவ்வாதனத்திற்கு தெற்கிலுள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்

தற்போது இவ்வாதனத்தை இராசேந்திரம் றெனிங்ஸ் பெண் மேரிதிரேசா என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராசேந்திரம் றெனிங்ஸ் பெண் மேரிதிரேசா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(CR 1449) N.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத்தில்...

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வவுனியா மாவட்ட கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஒரே திட்டத்தின் கீழ் அடுத்த 5 வருடங்களில் வடமாகாணம் முழுமையான அபிவிருத்தியை நோக்கி அழைத்துச் செல்லப்படும்.
எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு ஒரு இயந்திரம் மாத்திரமே உள்ளது. அதற்கு 50 வீதமான பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்தே பெறப்படுகிறது. மற்றைய மாகாணங்களிலிருந்து கிடைக்கும் பொருளாதாரப் பங்களிப்பு மந்தமான நிலையிலேயே உள்ளது. நாடு என்ற வகையில் முன்னேறிச் செல்வதற்கு இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். அதற்காக மற்றைய மாகாணங்களின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த வேண்டும். அதற்காகச் சில மாகாணங்கள் அறியப்பட்டுள்ளன. வடக்கு, மேற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இலங்கையின் தேசியப் பொருளாதாரத்துக்கு பெருமளவான பங்களிப்பை வழங்கக்கூடிய இயலுமையில் உள்ளன. அதற்கு அந்த மாகாணங்களை மேம்படுத்தவும் பலப்படுத்தவும் வேண்டும்.
தற்போது நிதிப் பலமும் இருப்பதால் இடைநிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்கமுடியும். அதேபோல் வெளிநாட்டு நிதியில் முன்னெடுக்கப்படும் திட்டங்களைத் தொடர்வதற்கான உதவிகளும் கிடைக்கப்பெறவுள்ளன - என்றார்.
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன, வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ்நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, சமூக அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னக்கோன், வவுனியா மாவட்டச் செயலாளர் பி.ஏ. சரத் சந்திர மற்றும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ-ம-110-26-18)

## 3-4 ஆண்டுகளுக்குள்...

மற்றும் பூநகரி) இந்த ஆண்டு 4 ஆயிரம் அமெரிக்க டொலர் முதலீடு கிடைக்கவுள்ளது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்துக்கு 4 நாள் பயணமாக வருகை தந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூநகரி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடலை பூநகரி பிரதேச செயலகத்தில் நடத்தினார்.
பூநகரிபிரதேசத்தில்சுற்றுலாத்துறையை முதன்மைப்படுத்திய விடயங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முன்மொழிவில் குறிப்பிடப்பட்டிருந்தன.
இதன்போது குறுக்கிட்ட ரணில் விக்கிரமசிங்க, சுற்றுலாத்துறையைவிட புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பிலேயே கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.
'வடக்கு மாகாணத்திலிருந்து காற்று மற்றும் வெப்ப நிலை காரணமாக மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தயாரிப்புக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. வட மாகாணத்தில் தயாரிக்கக்கூடிய மின்சாரத்தின் அளவை கணக்கிட்டு பார்க்கும்போது எஞ்சிய தொகையை இந்தியாவுக்கு விற்பனை செய்து பணம் பெறக்கூடிய நிலையும் உள்ளது. அதற்கான பேச்சுகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன' என்றும் ரணில் தெரிவித்தார்.
மன்னார் - பூநகரி - யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு - திருகோணமலை வரையிலான கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கி காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலமாக எவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்பதை கணக்கிடுமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்தார்.
மேலும் இந்த ஆண்டு பூநகரியில் அமையவுள்ள சூரிய சக்தி மூலமான மின் உற்பத்தி முதலீட்டுத் திட்டம் மற்றும் மன்னாரில் அமையவுள்ள காற்றாலை மின் உற்பத்தி முதலீட்டுத் திட்டம் ஆகியன ஊடாக 4 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் இந்தப் பகுதிக்கு கிடைக்கவுள்ளது. இதனூடாக உட்கட்டுமானம் மற்றும் வேலை வாய்ப்பு என்பன இந்தப் பகுதிக்கு கிடைக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## ஜனவரி...

தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தற்போது நாட்டில் நிலவும் தீவிர டெங்குப் பரம்பல் நிலமையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார அமைச்சால் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு தினங்களாக ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 10ஆம் திகதி வரையான மூன்று தினங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் வீடுகளையும் வேலைத்தலங்களையும் பொது இடங்களையும் குழுக்களாகப் பரிசோதனையிட்டு நுளம்பு பெருகும் இடங்களைக் கண்காணித்து அழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணியில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் ஏனைய தன்னார்வத் தொண்டர்கள் இணைந்து ஈடுபடவுள்ளனர்.
முதல் நாளான 8ஆம் திகதி பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் மயானங்கள் பார்வையிடப்படவுள்ளன.
இரண்டாம் நாளான 9ஆம் திகதி அரச, தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் மற்றும் கட்டட நிர்மாணப் பகுதிகள் பார்வையிடப்படவுள்ளன. மூன்றாம் நாளான 10ஆம் திகதி பொதுமக்களின் வீடுகள் பார்வையிடப்படவுள்ளன.
குழுப் பரிசோதனையின்போது டெங்கு பரம்பலுக்கு ஏதுவான நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் உள்ள வீடுகளின் அல்லது நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது.
(அ-ம-26-125-66)

## மடு, துணுக்காய்...

வவுனியாவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் மாவட்டம் கடந்தமுறை தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. க. பொ.த. சாதாரண தரப் பரீட்சையிலும் சிறப்பான பெறுபேறுகள் கிடைத்துள்ளன. மடு மற்றும் துணுக்காய் பிரதேச கல்வி வலயங்கள் எதிர்வரும் காலத்தில் ஒரே கல்வி வலயங்களாக இணைக்கப்படும்.
வடமாகாணக் கல்வி அபிவிருத்திக்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தாமாக முன்வந்து செயற்றிறனுடன் பணியாற்றி வருகின்றனர். அது தொடர்பில் மகிழ்ச்சியடையமுடியும். சுகாதாரத் துறையில் காணப்படும் பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது - என்றார். (அ-ம-26-110)

## உலங்குவானூர்தி...

பிலிருந்து நேற்றுமுன்தினம் மதியம் யாழ்ப்பாணம் நோக்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புறப்பட்டுள்ளார். அவர் உலங்கு வானூர்தியிலேயே யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்துள்ளார். அவர் பயணித்த உலங்குவானூர்தி மேலதிகமாக 2 உலங்கு வானூர்திகள் பாதுகாப்புக்காகப் பயணித்தன. அதில் ஒரு உலங்கு வானூர்தியில் திடீரென தொழில்நுட்பக்கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து 3 உலங்கு வானூர்திகளும் அநுராதபுரம் விமானப் படைத்தளத்தில் உடனடியாகத் தரையிறக்கப்பட்டன. சுமார் ஒரு மணி நேரத்தில் தொழில்நுட்பக்கோளாறு சரிசெய்யப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி அவை பயணித்தன. (அ-ஒ-5-125)

## திட்டமிட்டபடியே...

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 2023ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27, 28ஆம் திகதிகளில் திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியில் இடம் பெறும்.
கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவின் தலைமையில் மு.ப. 10 மணியிலிருந்து இந்த மாநாடு நடைபெறும் - என்றுள்ளது. (அ-ம-110)

## கல்விக்...

இலங்கையின் கல்வித்துறையை மேம்படுத்த அண்மைக்காலமாக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. கொழும்பு, கண்டி, வடக்கு என்பன வற்றை இலங்கையின் பிரதான கல்விக் கேந்திர நிலையங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-26-110)

## ரணிலின்...

வவுனியா மாநகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று மு.ப. 10 மணிக்கு வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை அங்கு சென்றார்.
இதன் காரணமாக வவுனியா நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு பல வீதிகள் மூடப்பட்டதால், பொதுமக்கள் பெரும்சிரமங்களை எதிர்கொண்டனர். (அ-ஒ-110)

## வடக்கு...

வடமாகாணத்தின் விவசாயிகள் திறமையும் செயற்றிறனும் கொண்டவர்கள். விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் விவசாய நிலங்களை முகாமைத்துவம் செய்வதன் வாயிலாக ஏற்றுமதி விவசாய தொழிற்றுறையைப் பலப்படுத்தலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
(அ-ம-26-110)

## ஐஸ்...

இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 2 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.
சந்தேகநபர்கள் புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் 22 மற்றும் 27 வயதுடையவர்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(அ-ம-19)

## காணாமலாக்கப்...

ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது ரணிலின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கூட்டம் நடைபெற்ற மண்டபத்துக்குச் செல்வதற்கு முயன்ற வடக்கு - கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி ஜெனிற்றா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பொலிஸாரின் பலப்பிரயோகத்தை வீடியோவாகப் பதிவுசெய்த மற்றொரு பெண்ணும் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.
அவர்கள் இருவரும் நேற்றையதினமே நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது வடக்கு -கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி ஜெனிற்றா நீதிமன்ற உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். மற்றைய பெண் பிணையில் விடுவிக்கப்பட்டார். நேற்று போராட்டங்களில் ஈடுபடுவதற்கு நீதிமன்றத்தின் மூலம் பொலிஸார் ஜெனிற்றாவுக்கு தடையுத்தரவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-110-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காங்கேசன்துறை - அநுராதபுரம் அடுத்தவாரம் மேலதிக ரயில்கள்

யாழ்ப்பாணம், ஜன.6
காங்கேசன்துறை - அநுராதபுரத்துக்கு இடையில் அடுத்தவாரம் முதல் இரண்டு ரயில் சேவைகள் மேலதிகமாக ஈடுபடுத்தப்படவுள்ளன என்று யாழ். ரயில் நிலையத்தின் அத்தியட்சகர் சுரேந்திரன் தெரிவித்தார்.

திருத்தப் பணிகளுக்காக ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புனரமைப்புத் திட்டத்தின் முதலாம் பாகம் ஓமந்தை முதல் அநுராதபுரம் வரை நிறைவேற்றப்பட்டுள்ளது. 6 மாத காலப்பகுதியைக் கொண்ட இந்தச் சீரமைப்புப் பணிகளைத் தொடர்ந்து தற்போது, அநுராதபுரத்திலிருந்து மாகோ வரையிலான 65 கிலோமீற்றர் ரயில் பாதைகள் சீரமைக்கப்படவுள்ளன. திருத்தப் பணிகளுக்காக எதிர்வரும் 6ஆம் திகதிமுதல் மேற்படி ரயில் பாதைகள் மூடப்படுகின்றன. திருத்தக் காலத்தில் காங்கேசன்துறையில் இருந்து அநுராதபுரம் வரையில் மேலதிகமாக இரண்டு ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம-26)

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி வடக்கு, மீசாலையில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. மின்சாரம், கிணறு, Watertank போன்ற வசதிகளும் பல வாகனங்கள் நிறுத்தக்கூடிய இட வசதிகளும் உண்டு.

தொடர்பு: 077 539 3728

# நாடாளுமன்றை இடைநிறுத்த உடன்படோம்

கொழும்பு, ஜன. 6
நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி உடன்படவில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்துவது பற்றிப் பேச்சு இடம்பெறுகின்றது. ஜனாதிபதி உரை நிகழ்த்துவதற்காகவா அல்லது குழுக்களை கலைப்பதற்காகவா இந்த முயற்சி எனத் தெரியவில்லை. எனினும், நாம் இந்தத் தீர்மானத்தில் உடன்படவில்லை.

இந்த அரசு தேர்தலுக்கு அஞ்சுகின்றது. வேட்பாளர்கள் பற்றி கருத்து மோதல் உள்ளது. எனவே, எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்ற தெளிவு இல்லை. இந்த அரசு கூறும் விடயங்களை, முன்னெடுக்கும் திட்டங்களை நம்புவதற்கு மக்கள்தயாரில்லை' - என்றார். (அ-ம-44)

## சுற்றிவளைப்புச் சோதனை: பருத்தித்துறையில் பரபரப்பு

பருத்தித்துறை நகரில் நேற்று இரவு திடீரென மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் சுற்றிவளைப்பு சோதனையால் மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது.

போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கையாக, காங்கேசன்துறை பிராந்தியம் இரண்டுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இலங்கைக்கோன் வழிகாட்டுதலில், பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க தலைமையில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றிவளைப்புச் சோதனையை முன்னெடுத்தனர்.

பருத்தித்துறை நகரில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள் சொகுசு பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்களில் பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் சல்லடை போட்டுச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. (ம-100)

# விபத்தில் இருவர் காயம்

யாழ்., ஜன. 6
யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில், இருவர் காயமடைந்தனர்.

கப்ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதுண்டதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த ஆணொருவரும் அவருடன் பயணித்த சிறுமியுமே காயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். வாகனத்தின் சாரதியை விசாரணைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ம-27)

## பொங்கல் தினத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு

சமுத்திரா ரேடர்ஸ் நிறுவனத்தில் மின்சுற்றில் ஒரு தடவையில் மா அரைக்கும் இயந்திரம், மற்றும் விவசாய உபகரணங்கள், மோட்டார்கள், ஸ்ராட்டர்களை ஒரே இடத்தில் விசேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 021 222 2938, 077 4949 683

(CS27571) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் பருத்தித்துறை வீதி, பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.

தொடர்பு:
077 077 4919

(CS27568) A-1

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கு இணங்க எதிர்வரும் தைபொங்கல் தினத்தை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்



* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை ஊறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

சிறிராம் ஜுவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

தொடர்பு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

# சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக தரமுயர்த்துக

## ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வடமாகாணத்துக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று இரவு சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

விடுதிகளில் உள்ள குறைபாடு, முகாமைத்துவ பீடத்துக்கான பேருந்து வசதிகளை ஏற்படுத்தல், சித்த மருத்துவத்துறையை பீடமாக தரமுயர்த்தல், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் இதன்போது மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 37 மாணவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு வீதி, டச்சு வீதியில் (GPS வீதி) 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. 20 அடிப் பாதையுடன் மெயின் றோட் முகப்புடன் உண்டு.

தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 வரை

தொடர்பு: 076 755 8606
077 874 3204

(CS 27576) A-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org